

## வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**(வியாழன்தோறும்)**

| 18.05.2023 | **08. தேவனுக்கு மாத்திரமே மகிமை செலுத்துங்கள்!** |
|---|---|



‘‘சுய மகிமையில் சீழ் பிடிக்கும்!’’ என்பது பொதுவாக கூறப்படும் உண்மையான வாசகமேயாகும். இதை வேதம் கூறும்போது ‘‘அழிவு வரும் முன், மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்’’ என்றே கூறுகிறது (நீதி.18:12). பிலிப்பியர்.3:3-ம் வசனம் ‘‘மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்!’’ எனக்கூறும் இந்த வசனத்தையும் மனதில் கொள்ளுங்கள். இன்னும் அதிகமாய் ‘‘மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே (அவரை மாத்திரமே) மேன்மை பாராட்ட வேண்டும்’’ என 1கொரி.1:30-ம் வசனம் எடுத்து கூறுவதையும் பாருங்கள்!

ஆகவே, ஒருவன் தன்னைக் குறித்து மகிமைப்படுத்தாமலும், அல்லது மேன்மை பாராட்டாமலிருப்பதும் தாழ்மையின் ரூபமாகும்! ஒருவன் ‘‘கர்த்தரைக் குறித்து மேன்மைபாராட்ட முடியாதிருந்தால்’’ அதற்குப் பெயர் தாழ்மை அல்ல! அவன், விசுவாச தைரியம் இல்லாதவன்! தெய்வ விசுவாசத்திற்கும் தெய்வ அன்பிற்கும் வெற்றிக் கொடி உயர்த்தாதவன்! நீங்களோ அல்லது உங்கள் சபையோ, கிறிஸ்துவின் மணவாட்டியாய் திகழ வேண்டுமென்றால், உங்கள் அல்லது உங்கள் சபையின் விசுவாசத்திற்கும் அன்பிற்குமே எப்போதும் வெற்றிக் கொடி ஏற்றுங்கள்!

**- ரத்னம்**